திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, சீரணி அமைக்கப்பட்டு இதுவரையில் விலை மதிக்க முடியாத பணிகள் அந்த சீரணி ஆற்றி வருகிறது. அப்படி இருக்கையில் மேலும் இந்த சீரணியை விரிவடையச் செய்ய, இப்படிப்பட்ட நல்ல பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சீரணி மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. முதலாவது ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருந்து, இன்றையதினம் அதிலே 40 ஆயிரம் பேர்கள்வரை அந்தச் சீரணியில் சேர்ந்திருக்கிறார்கள். மேலும், அவர்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஊதியம் கருதாது உழைப்பவர்கள் என்று கருதுவதாலே அவர்கள் வந்து சேருவார்களானால், அவர்களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்படும். எனவே, இப்பொழுது அந்த நிலைமை ஒன்றும் இல்லை.

சூணாம்பேடு, இடைக்கழி நாடு ஊராட்சிகளைப் பிரித்தமைத்தல்..

* 553 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதியிலுள்ள சூணாம்பேடு, இடைக்கழி நாடு பஞ்சாயத்துக்களைப் பிரித்து அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இடைக்கழி நாடு, சூணாம்பேடு ஆகிய ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான செயற்குறிப்புகள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளன.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இது கடந்த 25 ஆண்டுகளாக இப்படியே சொல்லப்பட்டு வருகிறது. இந்த இடைக்கழி நாடு பஞ்சாயத்தில் 32 ஆயிரம் வாக்காளர்கள்

1975 ஏப்ரல் 3]

இருக்கிறார்கள். சூணம்பேடு பஞ்சாயத்தில் 22 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இந்த பஞ்சாயத்துக்கள்தான் அதிகமான ஜனத்தொகை கொண்டவை என்று கருதப்படுகிறது. இவற்றை உடனடியாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இடைக்கழி நாடு பஞ்சாயத்தை ஏழாகப் பிரிப்பதற்கான திட்டம், அடுத்தது சூணம்பேடு பஞ்சாயத்தை நான்காகப் பிரிப்பதற்கான திட்டம் நம்முடைய கலெக்டர் அவர்களிடம் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, வாக்காளர் பட்டியல் தயாரித்து முடிந்த பிறகுதான், இதை முடிவு செய்வார்கள்.

Social Education Centres.

* 554 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

whether there is any proposal under the consideration of the Government to accord sanction for grants for the opening of one Social Education Centre in each Panchayat?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சமூகக் கல்வி நிலையம் அமைப்பதற்கு அரசு 1964-ம் ஆண்டிலேயே தக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, உத்தரவிருந்தாலும் இன்று பல பஞ்சாயத்து யூனியன்களில் ஒரு பஞ்சாயத்தில் ஒரு சோஷியல் எஜுகேஷன் சென்டர் இல்லா நிலைமை இருக்கிறது. அதோடு, இன்று ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு சோஷியல் எஜுகேஷன் விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். ஆனால் அவருக்கு வேறு வேலையில்லாமல் இருக்கிறது. சோஷியல் எஜுகேஷனுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகையானது மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு தினசரி (நியூஸ் பேப்பர்) வாங்குவதற்குக் கூட அந்தத் தொகை போதுமானதாக இல்லை. அரசு பிறப்பித்த உத்திரவை நடைமுறைப்படுத்துவதற்கும், சோஷியல் எஜுகேஷனுக்குக் கொடுக்கின்ற தொகையை அதிகரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.